செய்தி வெளியீடு எண் : 2417 நாள் : 04.12.2023

# மிக்ஜாம் புயலினால் மழைநீர் சூழ்ந்துள்ள தாம்பரம் அரசு மருத்துவமனை மற்றும் கிண்டி, கிங்ஸ் பல்நோக்கு அரசு மருத்துவமனை ஆகியவற்றை மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

..................

தாம்பரம் அரசு மருத்துவமனையில் மழைநீர் தேங்கியுள்ளது. எனவே, மருத்துவமனையில் தரைதளத்தில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை உடனடியாக முதல் தளத்திற்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

சென்னை, கிண்டி கிங்ஸ் அரசு பல்நோக்கு மருத்துவமனையினையும் ஆய்வு செய்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிக்கு எவ்வித பாதிப்பு ஏற்படாதவாறு அனைத்து உதவிகளும் செய்யுமாறும், மேலும் மின் தடை ஏற்பட்டால் உடனடியாக ஜெனரேட்டகளை இயக்க வேண்டும் எனவும், அதற்கு போதுமான எரிபொருள் மற்றும் பணியாளர்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் விழிப்புடன் பணியாற்ற மருத்துவமனை தலைவர் (டீன்) அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வின் போது, மாண்புமிகு குறு, சிறு மற்றம் நடுத்தரத் தொழில் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் திரு.சந்திரமோகன், இ.ஆ.ப., முதன்மைப் தலைமைப் பொறியாளர் திரு.சத்தியமூர்த்து, தலைமைப் பொறியாளர் திரு.ஆயத்தரசு ராஜசேகரன், சிறப்பு அலுவலர் திரு.கே.விஸ்வநாத், மற்றும் பொதுப்பணித் துறை பொறியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in